<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 110/2023</u>

<u>LW: 1 PW:1</u>

2026 ஆம் ஆண்டு மே மாதம் 20 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. பூபதி | த / பெ. | திரு. பக்கிரிசாமி |
| கிராமம் | : | வெள்ளக்குடி | தாலுக்கா | திருவாரூர் |
| தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் | வயது | 53 |

**<u>எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.</u>**

**<u>முதல்விசாரணை</u>**

நான் தற்போது கூத்தாநல்லூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த போது மதுவிலக்கு சம்மந்தமாக கடந்த 19.09.2021 ந் தேதி காலை 09.00 மணியளவில் உதவி ஆய்வாளர் அன்பழகன், முதல்நிலை காவலர் 1417 ஜானி ரஞ்சித் ஆகியோருடன் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து சென்ற போது ராதா நஞ்சை தலையாரி களம் எதிரி அவர் வீட்டின் பின்பு சாக்கு மூட்டையுடன் நின்று கொண்டிருந்தவரை விசாரித்த போது முன்னுக்கு பின் முரணாக முகவரி சொன்னவரை அவர் வைத்திருந்த சாக்கு மூட்டையை சோதனை செய்த போது 15 லிட்டர் பிடிக்கக்கூடிய பாலிதீன் பையில் தலா 10 லிட்டர் வீதம் 11 பாலிதீன் பைகளில் மொத்தம் 110 லிட்டர் சாராயம் வைத்திருந்தார்.

பின்பு விசாரிக்க சேகர், வயது 54, த/பெ. சுப்ரமணியன் ராதாநஞ்சை, தலையாரி களம் என்று தெரியவந்தது. பிறகு அரசு அனுமதி இல்லாமல் சாராயம் வைத்திருந்ததற்காக 09.00 மணியளவில் உதவி ஆய்வாளர் அன்பழகன் அவரை கைது செய்து, பின்பு வழக்கு சொத்தினை பொது ஜன சாட்சிகள் யாரும் முன் வராத காரணத்தால் உதவி ஆய்வாளர் எங்கள் முன்பாக கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் முதல்நிலை காவலர் ஜானி ரஞ்சித் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தார். **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பிறகு 09.15 மணியளவில் 650 Ml பிடிக்கக்கூடிய 2 பாட்டில்கள் 500 ml மாதிரிக்காக எடுக்கப்பட்டு மீதமுள்ள 150 லிட்டரை அதே இடத்தில் 09.30 மணிக்கு கொட்டி அழிக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகசரில் முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் முதல்நிலை காவலர் ஜானி இரஞ்சித் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தார். **அந்த அழித்தல் மகசர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன்பின் எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண். 780/2021 சட்டப்பிரிவு 4(1)(aaa), 4(1-A) TNP Act ன் கீழ் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

மதுவிலக்கு ரோந்து பணி சம்மந்தமாக எந்த வாகனத்தில் சென்றோம் என்பதை ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ராதாநஞ்சை என்ற கிராமம் மக்கள் அதிகமாக குடியிருக்கும் பகுதி என்றால் சரிதான். அங்கிருந்து தனிநபர் சாட்சி யாரும் சாட்சியம் அளிக்க முன் வரவில்லை என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காவலரின் நாட்குறிப்பு என்னிடம் ஆய்வாளர் கேட்டாரா என்றால் இல்லை

நானும் கொடுக்கவில்லையா என்றால் இல்லை. நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எந்த தடயப்பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றாலும் எதிரியும் கைப்பற்றவில்லை என்றாலும்சரியல்ல. காவலரின் புள்ளிவிவரங்களுக்காக பொய் வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குற்ற சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.20 17:03:11 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்

<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 110/2023</u>

<u>LW : 2 PW : 2</u>

2026 ஆம் ஆண்டு மே மாதம் 20 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ஜானி ரஞ்சித் | த / பெ. | திரு. ஜான் ஜேசுகனி |
| கிராமம் | : | திருப்பத்தூர் | தாலுக்கா | திருப்பத்தூர் |
| தொழில் | : | முதல்நிலை காவலர் | வயது | 38 |

**<u>எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.</u>**

**<u>முதல்விசாரணை</u>**

நான் தற்போது கீழச்சீவல்பட்டி காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்த போது மதுவிலக்கு சம்மந்தமாக கடந்த 19.09.2021 ந் தேதி காலை 09.00 மணியளவில் உதவி ஆய்வாளர் அன்பழகன், தலைமை காவலர் பூபதி ஆகியோருடன் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து சென்ற போது ராதா நஞ்சை தலையாரி களம் எதிரி அவர் வீட்டின் பின்பு சாக்கு மூட்டையுடன் நின்று கொண்டிருந்தவரை விசாரித்த போது முன்னுக்கு பின் முரணாக முகவரி சொன்னவரை அவர் வைத்திருந்த சாக்கு மூட்டையை சோதனை செய்த போது 15 லிட்டர் பிடிக்கக்கூடிய பாலிதீன் பையில் தலா 10 லிட்டர் வீதம் 11 பாலிதீன் பைகளில் மொத்தம் 110 லிட்டர் சாராயம் வைத்திருந்தார்.

பின்பு விசாரிக்க சேகர், வயது 54, த/பெ. சுப்ரமணியன் ராதாநஞ்சை, தலையாரி களம் என்று தெரியவந்தது. பிறகு அரசு அனுமதி இல்லாமல் சாராயம் வைத்திருந்ததற்காக 09.00 மணியளவில் உதவி ஆய்வாளர் அன்பழகன் அவரை கைது செய்து, பின்பு வழக்கு சொத்தினை பொது ஜன சாட்சிகள் யாரும் முன் வராத காரணத்தால் உதவி ஆய்வாளர் எங்கள் முன்பாக கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் தலைமை காவலர் பூபதி சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தார். பிறகு 09.15 மணியளவில் 650 Ml பிடிக்கக்கூடிய 2 பாட்டில்கள் 500 ml மாதிரிக்காக எடுக்கப்பட்டு மீதமுள்ள 150 லிட்டரை அதே இடத்தில் 09.30 மணிக்கு கொட்டி அழிக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் தலைமை காவலர் பூபதி சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தார். அதன்பின் எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண். 780/2021 சட்டப்பிரிவு 4(1)(aaa), 4(1-A) TNP Act ன் கீழ் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

மதுவிலக்கு ரோந்து பணி சம்மந்தமாக எந்த வாகனத்தில் சென்றோம் என்பதை ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ராதாநஞ்சை என்ற கிராமத்தில் மக்கள் அதிகமாக குடியிருக்கும் பகுதி என்றால் சரிதான். ஆனால் எதிரியின் வீடு கடைசி வீடாகும். அதன்பிறகு நாகப்பட்டிண மாவட்டத்தின் காட்டு பகுதி உள்ளது. அங்கிருந்து தனிநபர் சாட்சி யாரும் சாட்சியம் அளிக்க முன் வரவில்லை என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காவலரின் நாட்குறிப்பு என்னிடம் ஆய்வாளர் கேட்டாரா என்றால் எங்களுக்கு பணி ஒதுக்கியதே என்றால்

ஆய்வாளர் தான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எந்த தடயப்பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றாலும், எதிரியும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. காவலரின் புள்ளி விவரங்களுக்காக பொய் வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குற்ற சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.20 17:03:21 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்